**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-122/2025**
**Dated :22.05.2026**
**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW3 Examined as PW3 (DefactoComplainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரெங்கநாதன் | வயது | : | 45 |
| தந்தை பெயர் | : | ராமச்சந்திரன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | மருங்கூரணி | தொழில் | : | கூலிவேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

( எதிரி ஆஜர்.)
முதல் விசாரணை

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது தம்பி ஆவார். சாட்சி ராமச்சந்திரன் எனது தந்தை ஆவார். சாட்சி மருதாம்பாள் எனது தாயார் ஆவார். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற கேள்வி**

போலிசார் விசாரணையில், கடந்த 04.06.2025 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் நானும் எனது பெற்றோரும் எங்கள் வீட்டு வாசலில் உட்கார்ந்து இருந்த போது அங்கு வந்த எதிரி குடிக்க பணம் கேட்டு கொடுக்காததால் எனது தந்தையை அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த கத்தியால் எனது தந்தையின் கழுத்தில் கீறி காயத்தை ஏற்படுத்தினார் என்றும் கத்தியை காட்டி கொல்லாமல் விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததார் என்றும் இது சம்மந்தமாக போலீசாரிடம் அ.சா.1 புகார் வாக்குமூலம் அளித்தார் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.22 16:32:11 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-122/2025**
**Dated :22.05.2026**
**Deposition of witness for :P.W4**

**Additional Witness Examined as PW4 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகுமார் | வயது | : | 51 |
| தந்தை பெயர் | : | ராமசந்திரன் | தாலுகா | : | கந்தர்வக்கோட்டை |
| கிராமம் | : | கந்தர்வக்கோட்டை | தொழில் | : | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent. Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு முன்பு பணியில் இருந்த, உதவி ஆய்வாளர்கள் மார்நாடு மற்றும் நாகராஜன் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். அவர்கள் தற்போது பணி மாறுதலில் வேறு காவல் நிலையங்களில் பணியில் இருப்பதால், வழக்கு கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் மார்நாடு கடந்த 04.06.2025 ஆம் தேதி, கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில், நிலைய பொறுப்பில் இருந்த போது, தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சென்று, அங்கு வழக்கு சம்பவத்தில் காயமுற்ற, சிகிச்சையில் இருந்த மருங்கூரணி கிராமத்தை சேர்ந்த ராமசந்திரன் மனைவி மருதாம்பாள் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண் 119/2025 இல் சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNSS -ன் கீழ் வழக்கு பதிவு செய்து, கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(மேற்படி புகார் வாக்குமூலம்**

**அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) பின்னர், இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 05.06.2025 ஆம் தேதி, காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் மகேஷ்வரி மற்றும் மகாலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

3) பின்னர் பட்டியல் சாட்சிகள் மருதாம்பாள், ராமசந்திரன், ரெங்கநாதன், வடிவேல், வெங்கடாசலபதி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்ததில், வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில், 28.06.2025 ஆம் தேதி மதியம் 03.00 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி முத்துகுமார் என்பவரை அடையாளம் கண்டு, காரணம் கூறி, கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் வழக்கின் கோப்பினை மேல்விசாரணைக்காக நாகராஜன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

4) அவர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துகொண்டு 19.08.2025 ஆம் தேதி கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பாண்டீஸ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ.சா.1க்கான விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்று வந்துள்ளார். **(மேற்படி விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**5)** பின்னர் **19.08.2025** ஆம் தேதி தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அ**.**சா**.1**க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அ**.**சா**.1**க்கான காயச்சான்று பெற்று வந்துள்ளார்**.** **(மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6**)** பின்னர், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் விசாரணை செய்து உதவி ஆய்வாளர் மார்நாடு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் இந்த விசாரணையை முடித்து வழக்கின் கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு

எதிராக 296(b), 118(1), 351(3) BNSS -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் நான் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றால் சரிதான். வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும், உதவி ஆய்வாளர் சம்பவ இடம் சென்று, சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து, எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள் நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.22 16:32:18 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**